# ஊடக வெளியீடு

## வீட்டுப் பணியாளர்களும் கண்ணியமான பணிக்கு தகுதியானவர்களே

*சர்வதேச வீட்டுப் பணியாளர் தினம் 2021. ILO சமவாயம் 189ஐ ஏற்றுக்கொண்டு 10 வருடங்கள்.*
*தொழில் சட்டங்களில் உள்ளடக்கம்*

**கொழும்பு, 2021 ஜூன் 16** – பத்து வருடங்களுக்கு முன்னர் இன்றைய தினத்தில், அரசாங்கங்களும், தொழில் வழங்குனர்களும் தொழிலாளர் சங்கங்களும் சர்வதேச தொழில் தாபனம் (ILO) சமவாயம் இலக்கம் 189 மற்றும் வீட்டுப் பணியாளர்கள் பற்றிய விதப்புரை 201 ஆகியவற்றை ஏற்றுக்கொண்டபோது, வீட்டுப் பணியும் ஒரு பணிதான் எனவும் ஏனைய தொழிலாளர்களின் உரிமைகள் வீட்டுப் பணியாளர்களுக்கும் இருத்தல் வேண்டும் எனவும் உறுதிப்படுத்தின. அப்போதிருந்து 32 நாடுகள் சமவாயம் 189ஐ ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனால், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு வீட்டுப் பணியாளர்களை வழங்கும் தெற்காசிய நாடு எதுவும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கையில், 2016ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் பிரகாரம், 80,000 இற்கும் அதிகமான வீட்டுப் பணியாளர்கள் காணப்படுகின்றனர். அவர்களில் 66,000 இற்கும் அதிகமானவர்கள் பெண்களாவர். ILO தாபனத்துக்காக பெண்கள் ஆராய்ச்சி நிலையத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வுக்கு இணங்க, அவர்கள் பரவலாகக் காணப்படுவதுடன் வீட்டு மற்றும் பராமரிப்புப் பணிகளில் பாரிய பங்களிப்பை மேற்கொண்ட போதிலும், இந்தப் பணியாளர்களுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைக்கவில்லை. அத்துடன் அவர்கள் முறைசாரா பொருளாதார தொழிற்படையில் ஒரு பகுதியாக மெய்நிகர் தோற்றப்பாட்டில் புலப்படாதுள்ளனர்.

"இலங்கையில் வீட்டுப் பணி கவலைப்படக்கூடிய விதத்தில் தொழிற் சட்டங்களின் முழுமையான பாதுகாப்பு மற்றும் நோக்கெல்லைக்கு அப்பால் தொழிற்பட்டு, பெரும்பாலும் பெண் தொழிலாளர்களை மிகவும் சுரண்டலினால் பாதிக்கப்படக்கூடிய நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது. சமூகத்துக்கும் பொருளாதாரங்களுக்குமான அவர்களின் பாரிய பங்களிப்பை அங்கீகரிக்கும் அதேவேளை, கொள்கை, சட்டம் மற்றும் நடைமுறையில் இந்தப் பணியாளர்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றிய திடமான வழிகாட்டலை மைல்கல்லாக அமையும் ILO சமவாயம் 189 மற்றும் R 201 ஆகியன வழங்குகின்றன" என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ILO நாட்டு அலுவலகத்தைச் சேர்ந்த பணிப்பாளர் சிம்ரின் சிங் குறிப்பிடுகின்றார். "அங்கீகரித்தல் வீட்டுப் பணியாளர்களை உள்ளிட்ட எல்லா பணியாளர்களினதும் பாதுகாப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பு, தலைமைத்துவம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை குறித்துக்காட்டுகின்றது."

ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளில், 61.5 சதவீத வீட்டுப் பணியாளர்கள் தொழிற் சட்டங்களிலிருந்து முழுமையாக தவிர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் மிகவும் பெரும்பான்மையானவர்கள் சாதாரண வேலை மணித்தியாலங்கள் மற்றும் வாராந்த ஓய்வு வரையறை இன்றி காணப்படுகின்றனர். அவர்கள் வீட்டுப் பணிகளிலும் பராமரிப்புப் பொறுப்புகளிலும் பாரிய பங்களிப்பை வழங்கியபோதிலும், வீட்டுப் பணியாளர்கள் பொதுவாக மிகக் குறைந்த ஊதியத்தையே சம்பாதிக்கின்றனர். ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளில் 11 சதவீத வீட்டுப் பணியாளர்கள் மாத்திரமே ஏனைய பணியாளர்களுக்குச் சமமாக சட்ட ரீதியான ஆகக்குறைந்த ஊதியத்தை அனுபவிக்கின்றனர். அவர்களில் 19 சதவீதத்தினர் மாத்திரமே சம்பளத்துடனான வருடாந்த லீவுக்கு உரித்துடையவர்களாவர். இவை இன்று வெளியிடப்பட்ட *வீட்டுப் பணியாளர்களுக்கு கண்ணியமான பணியை ஒரு யதார்த்தமாக்குதல்: வீட்டுப் பணியாளர்கள் சமவாயம், 2011 (இல. 189) ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு பத்து வருடங்களின் பின்னர் முன்னேற்றமும் வாய்ப்புகளும்* பற்றிய ILO வின் அறிக்கை அறிக்கையில் காணப்படுகின்றன.

### தொழிற்சட்டங்களிலிருந்து தவிர்க்கப்பட்டிருத்தல்

வரலாற்று ரீதியாக, வீட்டுப் பணியாளர்கள் தேசிய தொழிற் சட்டங்களின் நோக்கெல்லையில் இருந்து தவிர்க்கப்பட்டுள்ளனர். சட்டத்திலும் நடைமுறையிலும் வீட்டுப் பணி ஒரு பணியாக அங்கீகரிக்கப்படவில்லை என்பதை இது பிரதிபலிக்கின்றது. இந்தக் காரணத்தினால், வீட்டுப் பணியின் சட்ட ரீதியான அங்கீகாரம் உலகளாவிய வீட்டுப் பணியாளர்களின் முதன்மையான கோரிக்கையாகக் காணப்படுகின்றது.

**குறைவான ஊதியங்களும் குடும்ப வருமானமும்**

இலங்கையில், வீட்டுப் பணியாளர்கள் பற்றிய இரண்டு சங்கங்களினால் கொழும்பு, கம்பஹா, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அளவீட்டுக்கு இணங்க, ஒரு வீட்டுப் பணியாளரின் சராசரி மாதாந்த ஊதியம் 15,940 இலங்கை ரூபா ஆகும். அறிக்கை செய்யப்பட்ட மாதிரியில் ஊதியம் பெறும் 94 சதவீத வீட்டுப் பணியாளர்கள் அதனையே தமது பிரதான வருமான மூலமாகக் கொண்டுள்ளனர். எழுபத்தெட்டு (78) சதவீதமான வீட்டுப் பணியாளர்கள் 3 தொடக்கம் 4 வரையான தங்கிவாழ்வோரைக் கொண்டுள்ளனர். அறுபத்தேழு (67) சதவீதத்தினர் தமது குடும்பத்தின் ஒரேயொரு அல்லது பிரதான வருமானம் ஈட்டுபவராகக் காணப்படுகின்றார்.

**வரையறுக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு**

இலங்கையில், கோவிட் 19 தொற்றின்போது, வீட்டுப் பணியாளர்களுக்கான தொழில் காப்புறுதி அல்லது வருமான ஆதரவு இல்லாத காரணத்தினால், தமது ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக வீட்டில் இருப்பதை விட தன்னுடையதும் அவர்களின் குடும்பத்தினர்களினதும் சுகாதாரத்தை ஆபத்துக்கு உள்ளாக்கியேனும் வேலைக்குச் செல்லுதல் முக்கியம் வாய்ந்தது என அளவீட்டில் பங்குபற்றிய 70 சதவீதமான மாதிரி பணியாளர்கள் கூறினர்.

"முறைசாரா துறையில் உள்ள பணியாளர்கள் தொடர்பான எமது குறிக்கோள், அந்தப் பணியாளர்களுக்கு சமூகப் பாதுகாப்புப் பயன்களைக் கிடைக்கச் செய்தலும் அவர்களுக்கு நலன்புரி நடைவடிக்கைகளும் சிறந்த சேவை நிலைமைகளும் கிடைக்கச் செய்வதாகும்" என PROTECT சங்கத்தைச் சேர்ந்த கல்பா மதுரங்க தெரிவித்தார்.

**வேலையின்போது பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர்**

வீட்டுப் பணியாளர்கள் இரசாயனப் பொருட்கள், பணிச் சூழலியல் மற்றும் பௌதீக ஆபத்துகளினாலும் குறிப்பாக பெண்கள் வன்முறை மற்றும் தொல்லைகளாலும் பாதிப்படையக்கூடியவர்களாவர். அவர்களின் பணிபுரியும் இடம் வேறு ஒருவரின் வீடு என்பதால், அவர்கள் உயர்ந்த மதில்களுக்கும் மூடிய கதவுகளுக்கும் பின்னால் மறைந்துள்ளனர். அவர்களின் பணிபுரியும் இடத்தை அல்லது அவர்கள் விபத்துக்கு உள்ளாகும்போது அல்லது சுகமின்றி இருக்கும்போது பணியாளர்களுக்கான நட்ட ஈடு கிடைப்பதை பரிசோதிப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.

**கோவிட் 19 தொற்றினால் அதிகரிக்கும் பாதிப்புக்கு உள்ளாவதற்கான தன்மை**



தற்போதைய கோவிட் 19 தொற்றின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டவர்களில் வீட்டுப் பணியாளர்களும் அடங்குவர். கூடுதலான வீட்டுப் பணியாளர்கள் தமது தொழில்களை இழந்துள்ளனர் அல்லது அவர்களின் வேலை நேரம் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப, ஏனைய பணியாளர்களுடன் ஒப்பிடுகையில், குறைவான ஊதியத்தையே பெறுகின்றனர். இலங்கையில், ILO வுடன் PROTECT சங்கம் மற்றும் வீட்டுப் பணியாளர்கள் சங்கத்தினால் நடாத்தப்பட்ட அளவீட்டின் அடிப்படையில், வீட்டிற்கு வெளியில் தங்கி வாழும் 70 சதவீதமான வீட்டுப் பணியாளர்கள் 2020ஆம் ஆண்டில் கோவிட் 19 தொற்றின்போது தமது தொழில்களையும் வருமானத்தையும் இழந்துள்ளனர்.

பணி புரியும் வீட்டில் தங்கி வாழும் வீட்டுப் பணியாளர்கள் கோவிட் 19 தொற்றின்போது தொடர்ந்து அவ்வீட்டிலேயே தங்கியுள்ளனர். வீட்டுப் பணியாளர்களின் சங்கங்களின் கூற்றுக்கு இணங்க, சிலர் முடக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் நீண்ட காலம் தமது குடும்பங்களைப் பிரிந்து வாழிவதாலும் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து வரையறைகளாலும் மன ரீதியான மற்றும் உள ரீதியான பிரச்சினைகளை அனுபவித்துள்ளனர்.

குறுகிய காலத்தில் வீட்டுப் பணியாளர்களைப் பாதுகாப்பதற்கு தொற்று பரவும் சூழ்நிலையில் கோவிட் 19 வழிகாட்டல்கள் பற்றிய பயிற்சியும் விழிப்புணர்வும், தனிப்பட்ட பாதுகாப்புக் கருவிகளை வழங்குதல் மற்றும் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார உத்தரவாதம் ஆகியவை தேவையாகும்.

"இன்றியமையாத இந்தப் பணியாளர்களுக்குத் தகுந்த பாதுகாப்பையும் மதிப்பையும் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக தொழில் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சட்டங்களில் வீட்டுப் பணியாளர்களை உள்ளடக்குவதுடன் ஆரம்பித்து ஆசிய, பசுபிக் நாடுகளில் வீட்டுப் பணியை முறைமைப்படுத்துவதற்கான

ஓர் அவசரத் தேவை உள்ளது'' என ILO வின் உதவிப் பணிப்பாளர் நாயகமும் ஆசிய பசுபிக் நாடுகளுக்கான பிராந்தியப் பணிப்பாளருமாகிய சிஹோகோ அசாதா மியகாவா (Chihoko Asada Miyakawa) கூறினார்.

**பதிப்பாசிரியர்களுக்கான குறிப்புகள்**

**சர்வதேச தொழில் தாபனத்தைப் (ILO) பற்றி**

சர்வதேச தொழில் தாபனம் பணி உலகிற்கான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் விசேடத்துவம் பெற்ற முகவர் ஆகும். இதன் உறுப்புரிமை ஆண்களுக்கும் பெண்களுக்குமான கண்ணியமான பணிக்காக கூட்டாக தொழில் நியமங்களை வகுத்து தொழிற் சந்தைக் கொள்கைகளை விருத்தி செய்து நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைக்கும் அரசாங்கங்கள், தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழிலாளர் சங்கங்களை உள்ளடக்கிய முத்தரப்பைக் கொண்டுள்ளது.

*ILO (2021), வீட்டுப் பணியாளர்களுக்கு கண்ணியமான பணியை ஒரு யதார்த்தமாக்குதல்: வீட்டுப் பணியாளர்கள் சமவாயம், 2011 (இல. 189) ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு பத்து வருடங்களின் பின்னர் முன்னேற்றமும் வாய்ப்புகளும்*

*வீட்டுப் பணியாளர்கள் சங்கம் மற்றும் PROTECT சங்கம் மற்றும் ILO (2020), இலங்கையில் வீட்டுப் பணியாளர்கள் மீதான கோவிட் 19 இன் தாக்கம் பற்றிய துரித மதிப்பீடு*

**மேலதிக தகவல்களுக்காக தொடர்புகொள்க:**

திரு. அசித செனவிரத்ன, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நாட்டு அலுவலகம், asitha@ilo.org